**வவுனியா நகர சபை – (01/01/2023 -18/03/2023)**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வவுனியா நகர சபையின் 2023 மார்ச் 18 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 மார்ச் 18 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 மார்ச் 18 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வவுனியா நகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 டிசெம்பர் 31 இல் அடையாளம் காணப்பட்டிருந்த வருமான நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 3,032,661 ஆனது 2023 மார்ச் 18 இல் உள்ளவாரான வருமானமாக மற்றும் நடைமுறை சொத்துக்கலாக நிதிக்கூற்றிக்களில் காட்டப்பட்டது. | 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றினை தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட்டு சீராக்கம் செய்யப்பட்டு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படுவதாக. | உரிய கால வருமானங்கள் மாத்திரம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 மார்ச் 18 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக ரூபா 4,501,412 ஆன 11 வேலைத்திட்டங்களானது நிறைவேற்றப்பட்டிருக்காத போதிலும் மதிப்பீடுகள், உடன்படிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் அடிப்படையில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு சில்லறைக்கடன்கொடுநர் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் நடப்பு பொறுப்புக்கள் அதிகரித்து காட்டப்பட்டுள்ளதுடன் வருமான மிகையும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதியில் ரூபா 22,971,184 பெறுமதியான வேலைகள் நிறைவேற்றப்பட்டு, கொடுப்பனவு செலுத்தப்பட்டது. நிறைவேற்றப்படாத வேலைகளின் பெறுமதியாக ரூபா. 4,507,146 காட்டப்பட்டுள்ளதாக | உரிய வேலைகள் உரிய காலத்தில் நிறைவேற்றப்படல் வேண்டியதுடன் கடன்கொடுநர் கணக்கின் கீழ் கரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நவீன சந்தைக் கட்டிடத் தொகுதியின் 2023 மார்ச் 18 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான பட்டியலிடப்பட்ட வாடகை வருமானம் ரூபா 1,080,924 ஆக காணப்பட்ட போதும் குறித்த காலப்பகுதியில் நிலுவை வாடகையுடன் சேகரிக்கப்பட்ட வாடகை ரூபா 1,978,176 ஆக மீளாய்வாண்டு வருமானமாக காட்டப்பட்டமையால் வருமான மிகை ரூபா 897,252 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இந்நிலுவைகள் தொடர்பான சீராக்கமானது 2023 டிசெம்பர் 31 இல் காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றில் மேற்கொள்ளப்பட்டு ஆண்டிறுதி நிலுவைகள், திரண்ட நிதி மற்றும் வருமான செலவீன கணக்கில் சரியான மீதிகள் காட்டப்படுவதாக. | உண்மை வருமானம் மாத்திரம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | குத்தகைக்கு வழங்கிய காணிகள் தொடர்பில் 2023 மார்ச் 18 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான குத்தகை வருமானம் ரூபா 805,065 ஆக காணப்பட்ட போதும், குறித்த காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட நிலுவை கிடைப்பணவுகலுடன் மொத்த குத்தகை வருமானம் ரூபா 851,649 குத்தகை வருமானமாக காட்டப்பட்டமையால் வருமான மிகை ரூபா 46,584 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2023 மார்ச் 18 ஆம் காலப்பகுதிக்குரிய நிலுவைகளை மிக குறுகிய காலப்பகுதியில் கால பகுப்பாய்வு செய்து பெற்றுக்கொள்வதற்கு போதிய கால அவகாசமின்மையினால், இந்நிலுவைகள் தொடர்பான சீராக்கமானது 2023 டிசெம்பர் 31 இன் காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படுவதாக. | உண்மை வருமானம் மாத்திரம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (உ) | 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 05 இயந்திரத் தொகுதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,765,000 இயந்திர தொகுதிகளின் பெறுமதிக்குள் உள்ளடக்கப்பட்டிருக்காமையால் இத் தொகையினால் இயந்திரங்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணணி தட்டச்சின் போது ஏற்பட்ட வழு காரணமாக வருடாந்த பொருட்கணக்கெடுப்பு அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களில் பின்வரும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி உள்வாங்கப்படாது ரூபா 1,765,000 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. குறித்த விடயமானது, பொதுநாட்குறிப்பு பதிவூடாக இருப்புப்புத்தகங்களில் சீர் செய்யப்பட்டுள்ளதாக. | உண்மைப் பெறுமதி வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் முதலாம் காலாண்டில் பட்டியலிடப்பட்ட செய்யப்பட்ட ஆதன வரி வருானம் ரூபா 5,565,511 ஆக காணப்பட்ட போதும் ஆதன வரி வருமானமாக ரூபா 8,978,076 கணக்குகளில் காட்டப்பட்டமையால் இதனால் 2023 மார்ச் 18 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வருமான மிகை ரூபா 3,412,565 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | ஆதன வரிக்குரிய நிலுவைகள் மென்பொருள் ஒன்றின் ஊடாகவே பகுப்பாய்வு செய்து வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது குறித்த மென்பொருள் ஊடாக மீள்மதிப்பு தொடர்பான பணிகள் இடம்பெற்று வருகின்றமையினால் 2023 மார்ச் 18 இல் உள்ளவாறான நிலுவைகள் தொடர்பான சரியான தரவுகளை பெற்றுக்கொள்ள இயலவில்லை. இந்நிலுவைகள் தொடர்பான சீராக்கமானது 31.12.2023 காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றில் மேற்கொள்ளப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | உண்மை வருமானம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகரசபைகள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 255 பிரிவு 145(2) | சபைக்குச் சொந்தமான 397 கடையறைகளுக்கான வாடகைக் கட்டணம் மற்றும் 95 நிலங்களுக்கான நில குத்தகைக் கட்டணம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான 336 கடைகளில் 255 கடைகளுக்கு 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விலை மதிப்பீடு செய்யப்பட்டு வாடகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. நிலங்களுக்கு விலை மதிப்பீட்டு பெறுமதி கிடைக்கப்பெறாத நிலையில், மீளவும் 2025 செப்தெம்பர் 12 ஆம் திகதிய கடிதமானது மீளவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக. | சட்ட ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | நகரசபைகள் கட்டளைச்சட்டம் பாகம் (III) பிரிவு 46 மற்றும் 49 | நகர சபையின் 50 வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த 50 வீதிகளை வீதிப்பதிவேட்டில் உள்வாங்குதல் தொடர்பான தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக. | சட்ட ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (இ) | நகர சபை ஒழுங்கு விதி அத்தியாயாம் (III) பிரிவு 34 | சபையினால் வீத வரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | சபையில் ஆதன பதிவேடானது 2009 ஆம் ஆண்டு விலை மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியினை உள்ளடக்கி பேணப்பட்டு வருகின்றது. தற்போது வீத வரி பதிவேட்டினையும் இற்றைப்படுத்துவதற்குரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. | ஒழுங்குவிதிகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நிதிப் பிரமாணம் 110 | ரூபா 204,500 நட்டங்கள் தொடர்பான பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வாகன பராமரிப்பின் கீழான ஓர் செலவீனமாக குறித்த விடயம் பதிவு செய்யப்பட்டமையினால், இச்செலவீனம் ஓர் நட்டமாக கருதப்படவில்லை என்பதுடன் நட்டப்பதிவேட்டிலும் பதிவு செய்யப்படவில்லை. | நிதிப்பிரமாணங்களு க்கு இணங்க டைவடிக்ககை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2023 மார்ச் 18 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,044,911 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வ காலப்பகுதிக்கான தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை..

#### 2.2.2 வருமானங்களை சேரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரிகள்** | | |
| (i) | மீளாய்வாண்டிற்கு முற்பட்ட காலப்பகுதிக்கு வரவேண்டிய ஆதனவரி நிலுவை கூட்டு மொத்தம் ரூபா 30,670,200 காணப்படுகின்ற போது நிலுவையை அறவிட சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் நிலுவைகளுக்கான காலப்பகுப்பாய்வும் செய்யப்பட்டிருக்கவில்லை. | இதுவரை ரூபா. 8,244,935 நிலுவைகள் அறவீடுசெய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள நிலுவைகளை அறவீடு செய்தல் தொடர்பில், சிவப்பு அறிவித்தல்களை வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. 2026 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த நிலுவைகள் தொடர்பில், விசேட நடமாடும் சேவைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக. | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சபைக்கு சொந்தமான ஆதனங்களின் வருமதியான குத்தகை வருமான நிலுவை ரூபா 733,217 இனை கடந்த 05 வருடங்களுக்கு மேலாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் ஆக்கபூர்வமான மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் ரூபா 733,217 இனை அறவீடு செய்தல் தொடர்பில் இணக்க சபை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றதாக. | -மேற்படி - |
| (iii) | சபைக்கு சொந்தமான பொதுப் பூங்கா மற்றும் சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றிற்கான குத்தகைப்பணம் ரூபா 548,876 அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான பொதுப்பூங்கா நிலுவை குத்தகைதாரரால் செலுத்தப்படாதுள்ளமை தொடர்பில், குத்தகையாளருக்கு எதிராக பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக. | நிலுவைக் குத்தகை விரைவாக அறவிடல் வேண்டும். |
| (iv) | சபைக்கு சொந்தமான 304 கடைகள் மற்றும் 95 காணிகளுக்கான நில வாடகை ஒப்பந்த காலம் நிறைவடைந்து 01 தொடக்கம் 33 வரையான வருடங்கள் கடந்த நிலையிலும் உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இலக்கம் 1980/46 இன் பந்தி 7 இற்கு இணங்க மீள ஒப்பந்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 336 கடைகள் மற்றும் 95 நிலங்கள் உட்பட மொத்தமாக 431 வாடகைதாரர்களுக்கும் ஒப்பந்த திகதிகளை ஒரே திகதிக்கு மாற்றுவதன் பொருட்டு தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக. | புதிய ஒப்பந்தங்களுக்கு உட்பட்டு திருத்தப்பட்ட குத்தகை அறவிடப்படுதல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபைக்கு சொந்தமான 7 பேர்ச் விஸ்தீரணம் உடைய காணியை தனிநபர் தன்னிச்சையான முறையில் ஆக்கிரமித்து தொழில்நிலையம் நடாத்தி வருகின்ற போதும் நகரசபை கட்டளைச்சட்டம் 255 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காணியினை நில அளவை திணைக்களம் மற்றும் பிரதேச செயலாளர் ஊடாக எல்லைப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவடைந்ததும் குறித்த காணி தொடர்பில் தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக. | சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நகர சபையினால் மேலதிக நிதியை பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாமல் அரச வங்கியில் நடைமுறைக்கணக்கில் பராமரிக்கப்ட்டு வருகின்ற மீதியானது 2023 மார்ச் 18 இல் உள்ளவாரு ரூபா 44,425,345 ஆகும். | குறித்த நடைமுறைக்கணக்கு மீதி ரூபா 65,155,447 ல் 2023 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வேலைகளின் எஞ்சியுள்ள வேலைகளுக்காக செலுத்தப்பட வேண்டியுள்ள கடன் கொடுநர் மீதிகள் ரூ. 25,991,245ஆகும். | மேலதிக நிதியை பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடைமுறைக்கணக்கில் மேலதிகமாகவுள்ள நிதியினை 2024 மார்ச் மாத காலப்பகுதியில் இருந்து Swiping Facility வங்கிச்சேவை மூலம் வங்கியில் முதலீடு செய்து 2024 ஆம் ஆண்டிற்குரிய வருமானமாக ரூபா. 1,296,808 ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ளதாக. | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வவுனியா வாடிவீட்டுக்கான வாடகை நிலுவை ரூபா 2,229,222 ஆனது 2019 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2023 திசெம்பர் 31 வரை நிலுவையாக காணப்பட்டிருந்தது. | 2022 திசெம்பர் 31 ல் உள்ளவாறான வாடி வீட்டிற்குரிய (Rest House) வாடகை நிலுவை ரூபா. 2,229,222 இது வரை செலுத்தப்படாதுள்ளமை தொடர்பில் வழக்கு (வழக்கு இல (L218,2022) இடம்பெற்று வருகின்றது. இவ்வழக்கு நிறைவடைந்ததும் கிடைக்கப்பெறும் தீர்ப்பின் அடிப்படையில் இந்நிலுவைகள் தொடர்பான தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக. | நிலுவைகளை விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | வவுனியா நகர சபையினால் சுற்றுலாத்துறையினை அபிவிருத்தி செய்வதற்காக வவுனியா குளம் சுற்றுலா மையம் வேலைக்காக கூட்டுமொத்தம் ரூபா 7,230,939 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தும் இவ்வறிக்கைத் திகதி வரையும் பயன்பாட்டிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. | மாவட்ட நீதிமன்றத்தில் குத்தகையாளருக்கு எதிராக, தற்போது வழக்கு இடம்பெற்று வருகின்றது. தீர்ப்பு கிடைக்கப்பெற்றதும் தீர்ப்பின் அடிப்படையில் குறித்த சுற்றுலா மையத்தினை பாவனைக்கு வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கப்படுவதாக. | சபைக்கு உரித்தா ஆதனங்கள் பயன்பாட்டிற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2021 - 2022 ஆண்டு காலப்பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரத்திற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட திருத்தங்களை மேற்கொண்டு மீளவும் சமர்ப்பிக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் | சபையின் தலைவராக கடமையாற்றியிருந்த திரு.இ.கௌதமன் அவர்களின் நியாயப்படுத்தலுடன் அவரது பணிப்புரைக்கமைவாக கட்டட அனுமதிகள் வழங்கப்பட்டிருந்ததாக. | குழுவின் இணக்கத்துடன் கட்டட அனுமதிகள வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கு முரணாக தவிசாளரினால் கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | | |
| (ஈ) | சபைக்குரித்தான 28 எண்ணிக்கையான காணிகளுக்கு காணி உரிமை பத்திரத்தை பெற நகர சபையால் நாளதுவரையில் நடவடிக்கை எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரித்தான 16.17 ஹெக்ரேயர் விஸ்தீரணமுடைய 26 காணிகளுக்குரிய பாரதீனப்படுத்தல் கட்டளைகளை பெற்றுக்கொள்வதற்கான தொடர் நடவடிக்கை நகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாக. | ஆதனங்களின் உரிமையை உருதிபடுத்திக்கிக்கொள்ளல் வேண்டும். |
| (உ) | வவுனியா நகர சபையினால் 2017 ஆம் ஆண்டில் திருநாவற்குளம் உள்ளக வீதி கல்லிட்டு தாரிடல் வேலைக்கு ஒப்பந்தகாரருக்கு பகுதி கொடுப்பனவுத் தொகையான ரூபா 1,136,507 ஆனது நிலையான வைப்பில் வைப்பிலிடப்பட்டுள்ளதோடு ஒதுக்கிடப்பட்ட வேலையை முடிவுறுத்தி பொதுமக்களுக்கான பயன்பாட்டை வழங்க சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரர் ஒப்பந்த காலப்பகுதியினுள் வேலையினை செய்து முடிக்க தவறியமையாலும் செய்து முடிக்கப்பட்ட பகுதியளவு வேலைக்கான கொடுப்பனவினை தொழிநுட்ப உத்தியோகத்தர் மறுத்ததுடன் அதனால் 2018 சனவாரி 24 இல் நகர சபையால் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. இதனை ஏற்றுக்கொள்ளாத ஒப்பந்ததாரர் வழக்கினை தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பு கிடைக்கப்பெற்றதும், குறித்த நிலையான வைப்பினை முடிவுறுத்தி, தொடர் நடவடிக்கை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக. | உரிய காலத்தில் ஒப்பந்த வேலைகள் முடிவுறுத்தப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 மார்ச் 18 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக வருமானங்கள் செலவுகள் தொடர்பாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை ஆதலால் குறித்த காலப்பகுதிக்கான உண்மை வருமானம், உண்மை செலவினம் தொடர்பான வருமான செலவின வேறுபாடுகளை ஒப்பிடக்கூடிய ஏதுநிலை காணப்படவில்லை. | பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சு அவர்களின் அறிவுறுத்தல் தமக்கு கிடைக்கப்பெற்ற பின்னரே, வவுனியா நகர சபையினை வவுனியா மாநகர சபையாக இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளமையினால், அவ்வறிவித்தல் கிடைக்கப்பெறும் வரை வவுனியா நகர சபையின் செயலாளராக செயற்படுமாறு நகர சபையின் செயலாளருக்கு பணிக்கப்பட்டிருந்தது. | பாதீடு தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்படல் வேண்டும். |